REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE : 55630

நம் நாடு

தி.மு.க.தின இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 2] சென்னை: மாசி 18௳ புதன் (2—3—55) ★ ★ வெளியூர்: மாசி 19௳ வியாழன் (3—3—55) [இதழ் 222

ரூ. 2000-க்கு அதிகமான சம்பளம் பெறுவோர்

1953 ஜூன் 30-ந் தேதியன்றுள்ள நிலவரப்படி, மாதம் ரூ. 2001-ம், அதற்கு மேலும் சம்பளம் வாங்கும் மத்திய சர்க்கார் அதிகாரிகள் எண்ணிக்கை 445 என்றாகுகவலை, உதவி உள்நாட்டு மந்திரி பி. எஸ். தத்தர் வெளியிட்டுள்ளார்.

ரூ. 510 முதல் 1000 வரை 7179 பேர்.
ரூ. 1001 முதல் 1500 வரை 1216 பேர்.
ரூ. 1501 முதல் 2000 வரை 510 பேர்.

என்ற தகவலும் தரப்பட்டது.

'திராவிடம் தனியானால்தான் நமது நலம் கூடும்'

'கோவில் வருமானத்தைக்கொண்டு 10-ம் படிவம்வரை இலவசக் கல்வி தரமுடியும்'

'நெய்வேலி நிலக்கரியை இந்தியப் பேரரசிடம் ஒப்படைக்காதீர்'

'கவர்னர் சம்பளத்தைக் குறைத்து, மேல் சபையை ஒழித்து சிக்கனம் செய்க'

சட்டசபையில் டி. சண்முகம் எம்.எல்.ஏ., முழக்கம்

"வரி விதிப்பதிலேயே சர்க்கார் கண்ணும் கருத்துமாயிருக்கின்றனர்;

"வரி விதிக்கத் துணிவு பெற்றிருக்கும் சர்க்கார், கவர்னருக்குத் தரப்படும் லட்சக் கணக்கான ரூபாய் சம்பளத்தைக் குறைப்பதற்கும் துணிவு கொள்ளவேண்டும்;

"பெரிய கோவில்களை எல்லாம் இந்திய சர்க்கார் எடுத்துக் கொள்ளப்போவதாக அறிவித்துள்ளது; அதற்குள், அந்தக் கோவில்களில் உள்ள பணத்தை எல்லாம் சென்னை சர்க்கார் எடுத்துக்கொள்ளவேண்டும்;

"அப்படி எடுத்துக்கொண்ட பணத்தைக் கொண்டு நாட்டில் உள்ள ஏழை மாணவர் எல்லோருக்கும் பத்தாவது வகுப்பு வரையில் இலவசக் கல்வி தர முடியும்;

"ஏழெட்டுப் பேர் வேலை செய்யும் மேல் சபை தேவையில்லை; அதை ஒழித்துச் செலவை மிச்சப்படுத்தலாம்;

(இடையில் நிதி மந்திரி சுப்பிரமணியம் குறுக்கிட்டு, 'இந்த சட்ட சபை கூடத் தேவையில்லைதான்,' என்று கூறினர்.)

"அதைவிடுத்து, நிலவரி விதிப்பது வேண்டாததாகும்; ஏழைகளை பாதிப்பதாகும்;

"ஜமீன்தார்களிடமிருந்த நிலத்தை எடுத்துக்கொண்ட சர்க்கார், மடாதிபதிகளின் நிலத்தை ஏன் மேற்கொள்ளவில்லை?

"மடாதிபதிகளின் நிலத்தை எடுத்துக்கொண்டால், அவர்கள் சாபமிட்டு காங்கிரஸ் சர்க்காரை எரித்துவிடமாட்டார்கள்; நான் கூறுவதை நம்புங்கள்;

"நெய்வேலித் திட்டத்தை மத்திய சர்க்காரிடம் கொடுக்காமல் சென்னை சர்க்காரே நடத்தலாம்—நடத்தவேண்டும் என்று விரும்புகிறேன்;

"திராவிட நாடு வடநாட்டிலிருந்து பிரிந்து தனித்திருந்தால்தான் இந்த நாட்டு மக்களின் நலன் பேணப்பட முடியும்—பெருக முடியும்; எனவே, திராவிட நாடு அமையுங்கள்—திராவிட நாடு அமைத்தால், இந்த மந்திரிகளே தொடர்ந்து பதவி வகிக்கலாம்; அதில் யாரும் தலையிடமாட்டார்கள்; எங்களுக்குப் பதவி ஆசை இல்லை; நீங்களே மந்திரிகளாயிருங்கள்; ஆனால், திராவிட நாடு அமையுங்கள்;

"இதை நான் உறுதியாகச் சொல்லுகிறேன்; இதனை யாரும் விளையாட்டாகக் கருதவேண்டாம்,"

—என்று, தோழர் டி. சண்முகம் எம். எல். ஏ. அவர்கள் சென்னை சட்ட சபையில் வரவு-செலவு விவாதத்தின்போது முழக்கமிட்டிருக்கிறார்.

காஷ்மீர் பிரச்சினை

முடிவுகாண மீண்டும் பேச்சுவார்த்தை

காஷ்மீர் பிரச்சினைக்கு நியாயமான, பெருமைப்படத்தக்க ஒரு முடிவு காண்பதற்காகப் பேச்சுவார்த்தைகள் நடத்தும் பொருட்டு தாம் மார்ச் மாதம் 25-ந் தேதியன்று டில்லி செல்லப் போவதாக, பாக். பிரதமர் முகம்மது அலி அறிவித்திருக்கிறார்.

ஆந்திர சட்டசபைத் தேர்தல் முடிவுகள்

52 இடங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது

ஆந்திராவில் நடைபெற்று முடிவுற்றிருக்கிற சட்டசபைத் தேர்தல்களின் முடிவுகள் வெளிவரத் துவங்கியுள்ளன.

196 இடங்களுக்கு நடைபெற்ற தேர்தலில் 52 இடங்களின் முடிவுகள் வெளியாகியுள்ளன.

கம்யூனிஸ்டுகளும், காங்கிரஸ் கட்சியினரும் தங்கள் தங்களுக்கே நேற்றுவரை மாபெரும் வெற்றி கிடைக்க இருப்பதாகக் கூறிவந்திருக்கின்றனர்.

முடிவு அறிவிக்கப்பட்டுள்ள 52 இடங்களில் 2 இடங்கள் மட்டுமே கம்யூனிஸ்டுகளுக்கு கிடைத்துள்ளது.

38 இடங்களை காங்கிரஸ் முன்னணி பெற்றுள்ளது.

ம. சோ. கட்சியினர் 4 இடங்களையும், சுயேச்சைகள் 8 இடங்களையும் கைப்பற்றியுள்ளனர்.

இந்த 52 இடங்களில் 44 இடங்களுக்குக் கம்யூனிஸ்டுகள் போட்டியிட்டிருக்கின்றனர்; 42 பேர் தோல்வி கண்டனர்.

இந்த 52 இடங்களுக்கும் மொத்தமாக 148 பேர் போட்டியிட்டிருக்கின்றனர்.

இவர்களில் 44 பேர் 'டெபாசிட்' தொகையை இழந்தனராம்!

சுயேச்சைகளில் 23 பேர்; ம. சோ. கட்சியில் 6 பேர்; கம்யூனிஸ்டுகளில் 5 பேர்; ஜன சங் 3 பேர்; காங்கிரஸ் 2 பேர்—ஜாமீன் தொகை இழந்துள்ளனர்.

தோல்வியை அடைந்துக் கொண்டவர்களில் தென்னெட்டி விசுவநாதமும் (பிரகாசம் மந்திரி சபையில் நிதி மந்திரி), கம்யூனிஸ்டு கட்சியின் பிரபலரான பசவ புன்னையாவும், இன்னும் சிலரும் குறிப்பிடத்தகுந்தவர்களாவர்.

(4-ம் பக்கம் பார்க்க)

எகிப்து - இஸ்ரேல் இராணுவச் சண்டை

ஒரு அதிகாரி உட்பட பலர் கொல்லப்பட்டனர்

இருதரப்புக்கும் ஏராள நஷ்டமாம்

டெல் அவிவ், மார்ச். 1—

எகிப்து துருப்புகள், இஸ்ரேல் துருப்புகளை நேற்றிரவு காஸா எனுமிடத்தருகே தாக்கியதில் இஸ்ரேல் துருப்புகளுக்கு மிகவும் சேதம் என்று இஸ்ரேல் நாட்டு இராணுவ அதிகாரி கூறியிருக்கிறார். சண்டை இஸ்ரேல் பிரதேசத்தில் ஆரம்பித்து எகிப்து மண்ணில் தொடர்ந்து நடைபெற்றது என்று தெரிகிறது

எகிப்து தரப்பில் ஒரு இராணுவ அதிகாரியும், 36 இராணுவ வீரர்களும் கொல்லப்பட்டதாகவும், 30 பேருக்கு மேல் காயம் பட்டனர் என்றும் கெய்ரோவில் அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டதாம்.

செஞ்சீனாவுக்கு அங்கீகாரம்

கெய்ரோ, மார்ச். 1—

துருக்கி—ஈராக் ஒப்பந்தத்தை எதிர்ப்பதற்கு அறிகுறியாக, எகிப்து, துருக்கியுடன் செய்து கொண்டுள்ள வர்த்தக ஒப்பந்தத்தை ரத்து செய்து விடுமென்றும், செஞ்சீனாவை அங்கீகரிக்கும் என்றும் கூறப்படுகிறது.

27—3—55-ல் தி. மு. கழக சிற்றூர்-பேரூர்-நகரக் கிளை செயற்குழுத் தேர்தல்

10—4—55-ல் மாவட்டக் கிளைச் செயற்குழுத் தேர்தல்

24—4—55-ல் புதிய பொதுக்குழுக் கூட்டம்: பொதுச்செயலாளர் தேர்தல்

பொதுச்செயலாளர் அறிவிப்பு

★

தி. மு. கழகப் பொதுச்செயலாளர் தோழர் சி. என். அண்ணாதுரை அவர்கள் இவ்வாண்டு நடைபெற வேண்டிய தி. மு. கழகத் தேர்தல்கள் பற்றிக் கீழ்க்கண்ட அறிக்கையை வெளியிட்டுள்ளார்கள்; அது வருமாறு:—

தி. மு. கழக சிற்றூர் (சிறிய பஞ்சாயத்து-Minor Panchayat)க் கிளை, பேரூர் (பெரிய பஞ்சாயத்து-Major Panchayat)க் கிளை, நகர (நகராட்சி-Municipality)க் கிளை, சென்னை வட்ட (Division)க் கிளை ஆகியவற்றின் புதிய செயற்குழுத் தேர்தல்கள் நடைபெற, **27—3—55** ஞாயிற்றுக்கிழமை தேர்தல் நாளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது.

எல்லா மாவட்டங்களின் செயற்குழுத் தேர்தல் நாளாக, **10—4—55** ஞாயிற்றுக்கிழமை தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது.

புதிய பொதுக்குழு கூடிப் பொதுச்செயலாளரைத் தேர்ந்தெடுக்கும் நாளாக, **24—4—55** ஞாயிற்றுக்கிழமை தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறது.

1—3—55-ஆம் நாளிலிருந்து 31—4—55-ஆம் நாள் வரையில் புதிய உறுப்பினர்கள் சேர்ப்பது நிறுத்தப்பட்டிருக்கிறது. 28—2—55-ம் நாள்வரை உறுப்பினரானவர்கள் மட்டுமே கிளைக் கழகத் தேர்தலில் பங்கு கொள்ள வேண்டும். 28—2—55-ஆம் நாளுக்கு முன்பு அமைக்கப்பட்ட கிளைக் கழகங்கள் மட்டுமே தேர்தல் நடத்த வேண்டும். புதிய கிளைக் கழகங்கள் அமைப்பது 1—5—55-க்கு மேல்தான் நடைபெற வேண்டும்.

கிளைக் கழகங்கள் அண்மையில் தேர்தல் நடத்தியிருந்தாலும் 27—3—55-ஆம் நாளில் மீண்டும் கூடி உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

தேர்தல் முடிவுகளைக் கிளைக் கழகப் பதிவுச் சீட்டில் எழுதி, 31—3—55-க்குள் தலைமைக் கழகத்துக்கு அனுப்பி வைக்க வேண்டும். கிளைக் கழகப் பதிவுச் சீட்டு தலைமைக் கழகத்திலிருந்து 10—3—55-ஆம் நாள் அனுப்பி வைக்கப்படும். பதிவுச் சீட்டு கிடைக்கப்பெறாத கிளைக் கழகங்கள் உடனே தலைமைக் கழகத்துக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

27—3—55-ல் தேர்தல் நடத்திப் பதிவுச் சீட்டைத் தலைமைக் கழகத்துக்கு அனுப்பி வைக்கும் கிளைகள் மட்டுமே மாவட்டக் கிளைச் செயற்குழுத் தேர்தலில் கலந்துகொள்ள அனுமதிக்கப் பெறும்.

கிளைகளின் தேர்தல் விதிகளும், முறைகளும் அடுத்த அறிக்கையில் வெளியிடப்படும்.

'அறிவகம்',
சென்னை.
1—3—55

சி. என். அண்ணாதுரை,
பொதுச்செயலாளர்

நம் நாடு
தி.மு.க.தின இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 2—3—1955 புதன்

வியப்பிற்குரியது!

ஒவ்வொரு ஆண்டு முடிவிலும் அரசாங்கம் தனது அடுத்த ஆண்டு வரவு — செலவு திட்டத்தை வெளியிடும்பொழுது, பொது மக்கள் பீதி அடைவது வழக்கமாகி விட்டது. அவர்கள் பீதிகொள்வது நியாயமானது என்பதை ஒப்புக்கொள்ளும் வகையில்தான் அரசாங்க வரவு - செலவு திட்டமும் இருந்து வருகின்றது.

புதிய வரி போடாமல் ஓராண்டாவது அரசாங்கம் தனது வரவு - செலவு திட்டத்தை இதுவரை உருவாக்கினது கிடையாது. சொறி பிடித்தவன் கை ஓய்ந்திராது என்பதுபோல், அவசியமிருந்தாலும், இல்லாமற் போனாலும் குறைந்த வருமானம் மட்டுமே கொடுக்கிற ஏதாவது ஒரு வரியைப் புதிதாகப் போடுவது என்பது சென்னை அரசாங்கத்தைப் பிடித்துள்ள தொத்து நோயாகிவிட்டது. அப்பொழுதுதான் அரசாங்கத்திற்கு மனச் சாந்தியும் திருப்தியும் ஏற்படுகிறது போலும்!

1955—56-ம் ஆண்டில் வரி வருமானம் மூலம் 46·27 கோடி ரூபாய் கிடைக்கக் கூடுமென சென்னை அரசாங்கம் எதிர்பார்க்கிறது. செலவு 49·58 கோடி ரூபாய் ஆகக் கூடுமென அரசாங்கம் கணக்கிட்டிருக்கிறது. ஆகவே அதில் பற்றுக்குறை 3·31 கோடியாகிறது.

இப்பற்றுக்குறைக்கு, மலைத் தோட்ட வரி, அபிவிருத்தி வரி, கோர்ட் கட்டண உயர்வு ஆகியவற்றின் மூலம் ரூ. 50 லட்சம் ஈடு செய்யப்படும்.

இவை நடைமுதல் ஆண்டில் இயற்றப்பட்டுள்ள சட்டங்களாகும். புது ஆண்டில் தான் இவை மூலம் வருமானம் கிடைக்கும்.

பற்றுக்குறையில் மேல் குறிப்பிட்ட வரி வருமானத்தை ஈடு செய்த பிறகும் பற்றுக்குறையாக 2·81 கோடி ரூபாய் எஞ்சி இருக்கிறது. இதை ஈடு செய்வதற்காகப் புது வரிகள் போடப்படுகின்றன.

நஞ்செய், புஞ்செய், தோட்டம் ஆகிய இனங்களில் வசூலிக்கப்பட்டுவரும் நிலவரியில் ரூபாய்க்கு இரண்டணா விகிதம் மிகுவரி போட்டும், விலை குறைவாக உள்ள புகையிலைப் பொருட்களின் விற்பனை மீது நூற்றுக்கு ரூ. 5 விகிதம் ஒரு கட்ட விற்பனை வரி விதித்தும் பற்றுக்குறையை நிரப்ப சென்னை அரசாங்கம் முன்வந்திருக்கிறது.

நிலவரி மீது விதிக்கப்படும் மிகுவரியின் மூலம் ரூ. 75 லட்சமும், விலை குறைந்த புகையிலைப் பொருட்களின் ஒரு கட்ட விற்பனை வரி மூலம் ரூ. 50 லட்சமும் கிடைக்குமென எதிர்பார்க்கிறது அரசாங்கம். இந்த 1·25 கோடியை ஈடு செய்த பிறகும் ஏறத்தாழ ரூ. 1·66 கோடி பற்றுக்குறையாகவே வரவு-செலவு திட்டத்தில் இருந்துவரும்.

வரவு—செலவு திட்டத்தில் துண்டு விழும் ரூ. 3·31 கோடி ரூபாயை ஈடு செய்யும் வகையிலோ அல்லது மேலும் மிகு வருமானத்தைக் காட்டும் வகையிலோ புது வரிகள் போதுமான அளவு போடப்பட்டுஇருந்தாலாவது, சென்னை அரசாங்கத்தின்--பொதுமக்கள் நலம் கறைபட்டாலும்—புத்திசாலித்தனமாவது வெளிப்பட்டிருக்க வாய்ப்பு நேர்ந்திருக்கும். ஆனல் இரண்டுமே இல்லை என்பதை சென்னை அரசாங்க நிதி அமைச்சர் இப்புது வரிகள் மூலம் காட்டிக் கொண்டிருக்கிறார்.

சென்னை மாநிலத்தைப் போன்றே 'ஏ' பிரிவு மாநிலங்களாக உள்ள ஆறு மாநிலங்கள் இதுவரை தங்கள் பற்றுக்குறை வரவு - செலவு திட்டங்களை வெளியிட்டுள்ளன. அவைகளில் ஒன்றுவது புதிய வரி போட முன்வரவில்லை—துணிவு கொள்ளவுமில்லை.

வங்காள வரவு-செலவு திட்டத்தில் 17 கோடி ரூபாய் பற்றுக்குறையெனக் காட்டப்பட்டிருக்கிறது. அதற்கு அடுத்தாற்போல், பீகார் வரவு-செலவு திட்டத்தில் ரூ. 9·65 கோடி துண்டு விழுகிறது. மேற்கூறிய இரண்டு அரசாங்கங்களும் துண்டு விழும் பெருந் தொகைகளைப் புதிய வரிகளைப் போட்டு ஈடு செய்ய வேண்டும் அல்லது கூடுமான வரை குறைக்க வேண்டும் என எண்ணக்கூடக் காணோம்.

உத்திர பிரதேசம்—ஒரிசா வரவு-செலவு திட்டங்களும் துண்டு விழும் திட்டங்களே யாகும். அவ்வாறு துண்டு விழும் தொகைகளை புது வரியின் மூலம் ஈடுசெய்ய வேண்டும் என்ற நினைப்பு அந்த இரு அரசாங்கங்களுக்கும் இல்லாமல் இருந்திருக்கின்றது.

பம்பாயோ தனது திட்டத்தில் மிகு வருமானம் காட்டியிருக்கிறது. எனவே, புது வரி போடவேண்டிய அவசியமே அதற்கு எழ இல்லாமல் போய்விட்டது.

ரூ. 17 கோடியும், ரூ. 9·65 கோடியும் துண்டுவிழும் முறையே பெற்று வங்க—பீகார் ஆகிய இரு மாநில அரசாங்கங்களும் புதுவரி போட முன்வராமல் இருக்கிறபொழுது, ரூ. 281 இலட்சமே துண்டுவிழும் சென்னை அரசாங்கம் மட்டும் புது வரிகள் போட ஏன் முன்வரவேண்டும்? இதில் மறைந்துகிடக்கும் உண்மை தான் என்ன?

மற்ற அரசாங்கங்கள் அனைத்தும் மத்திய வரி ஆய்வுக் குழுவின் சிபாரிசுகளை எதிர்நோக்கியும், அச்சிபாரிசுகள் எந்த அளவு மாநில அரசாங்கங்களின் செல்வ நிலையில் மாறுதலை உருவாக்கப் போகின்றன என்பதை அறிய நினைத்தும் புது வரிகளைப் போடாமல், துண்டு விழும் வரவு - செலவு திட்டங்களை அப்படியே விட்டு விட்டிருக்கிறார்கள். ஆனல், சென்னை அரசாங்கம் மட்டும் அவ்வழியைப் பின்பற்றும் கருத்தில்லாமல், புது வரிகளைப் போட முன்வந்திருக்கிறது. இது வியப்புக்குரியதேயாகும்.

சென்னை அரசாங்கத்திற்கு மட்டுமேதான் செலவுக்கு அதிகப்படியான பணம் தேவை; மற்ற மாநிலங்களுக்கு அத்தேவை கிடையாது எனக் கூறுவதற்குமில்லை. பணத் தேவை மாநிலங்கள் அனைத்துக்கும் பொதுவாக உள்ளதாகும்.

திராவிடம் பிரிந்தாலன்றி வாழ்வில்லை

காஞ்சி-வேலூர் இரயில் இணைப்பு

சிபாரிசு 'செய்திருக்கிறார்களாம்!

காஞ்சீபுரத்திற்கும் வேலூருக்குமிடையில் புதிய இரயில் பாதைகள் அமைக்கவேண்டுமென மத்திய சர்க்காரிடம் சிபாரிசு செய்துள்ளதாக சென்னை மேல் சபையில் அமைச்சர் பக்தவத்சலம் தெரிவித்திருக்கிறார்.

இதையொட்டியே மேலும் 13 புதிய இரயில் பாதைகளைக் கீழே குறிப்பிட்டுள்ளவாறு அமைத்துத் தரும்படி சிபாரிசு செய்துள்ளதாகவும், இது இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்படுமென்றும் தெரிவித்தார்.

தேனி—கூடலூர்;
நெய்வேலி—விருத்தாசலம்;
சேலம்—பெங்களூர்;
சின்ன சேலம்—செங்கற்பட்டு:
மங்களூர்—ஹாசன்;
திருநெல்வேலி—கன்னியாகுமரி;
திருச்சி—மானமதுரை;
மானமதுரை—தூத்துக்குடி;
தஞ்சாவூர்—பட்டுக்கோட்டை:
காஞ்சீபுரம்—வேலூர்;
சத்தியமங்கலம்—சாமராஜநகர்:
தலைச்சேரி—மைசூர்;
கொல்லங்கோடு—திருச்சூர்;

போலீசாரிடை க்ஷயரோகம்

உத்திரப் பிரதேச சர்க்கார் மாநில போலீஸ் படையில் க்ஷயரோக வியாதி அதிகரித்துவருவதால் அதைத் தடுக்கும் நோக்குடன் விசேட சாப்பாட்டுப் படியென மாதம் ரூ. 4 எல்லா போலீஸ்காரர்களுக்கும் தருகின்றனராம்!

1947-ல், போலீசாரில் 1000-க்கு 130.8 பேருக்கு இந்நோய் இருந்ததாகவும், இது 1953-ல் 321.1 ஆக அதிகரித்து விட்டதாயும் தெரிகிறது.

வரும் ஏப்ரல் முதல் இந்தச் சாப்பாட்டுப்படி தருவதினால் ஆண்டிற்கு ரூ. 23.36 லட்சம் சர்க்காருக்கு செலவாகுமாம்.

தலைநகரில் மதுபான விருந்து

அதிகமாகி வருவதாக எச்சரிக்கை

"இந்தியத் தலைநகரான புது டில்லியில், மதுபான விருந்துகளின் எண்ணிக்கை அதிகமாகிக்கொண்டே வருகின்றன: இதே நிலைமை இன்னும் நீடித்துக்கொண்டே இருந்தால் மதுவிலக்கு பற்றி சிந்திப்பதே வீணாகிவிடும். எனவே, டில்லியில் நடைபெறும் மதுபான விருந்துகளைக் குறைக்க வேண்டும்."

இவ்வாறு, மத்திய சர்க்கார் உள்நாட்டமைச்சர் பண்டித பந்த் குறிப்பிட்டிருக்கிறார்.

மேலும் அவர், ரஷ்யாவும், சீனாவும் தத்தம் நாட்டை நிர்மாணிப்பதற்கு எடுத்துக்கொண்ட காலத்தைவிட குறுகிய காலத்தில் இந்தியா தன்னை புனரமைத்துக் கொள்ள முடியும் என்றும், அதை சமாதான முறையில் செய்ய வேண்டியதாயிருக்கிறதென்றும் குறிப்பிட்டார்.

கொழுத்த வரிகளை கொள்ளையிட்டுச் செல்கிறது வடநாடு!

அதில் பெரும் பகுதி பங்கு பெற முயல வேண்டும்

தொழிற்சாலைகள் நிறுவப்படுவதில் தென்னாடு புறக்கணிக்கப்படுகிறது

சட்ட சபையில் தோழர் கிருஷ்ணமூர்த்தி கண்டனம்

"தீப்பெட்டி போன்ற பொருள்களுக்கு விதிக்கும் கலால் வரியில் பெரும் பங்கை மத்திய அரசாங்கம், சென்னை அரசாங்கத்திற்குத் தரவேண்டும்; அதனைப் பெற முயற்சி எடுக்க வேண்டும். மத்திய சர்க்கார், இங்கிருந்து நல்ல பல கொழுத்த வரிகளை அள்ளிக்கொண்டு போகிறது; அப்படியிருந்தும் அவர்கள் துவங்குகிற பெரும் பெரும் தொழிற்சாலைகளை வடநாட்டிலேயே நிறுவிவிட்டு, தென்னாட்டினைப் புறக்கணித்து வருகிறார்கள்; அதனால்தான் நாங்கள், திராவிட நாடு திராவிடருக்காக வேண்டும் என்று கோருகிறோம்,"

—என்று, திராவிட சட்டசபைக் கட்சித் தோழர் டி கிருஷ்ணமூர்த்தி எம். எல். ஏ. அவர்கள், சென்னை சட்டசபையில், வரவு - செலவு திட்ட விவாதத்தின்போது இடித்துக் காட்டியிருக்கிறார்.

எட்டாம் வகுப்புவரை ஏழை மாணவருக்கு இலவசக் கல்வி அளிப்பது என்ற சர்க்காரின் முயற்சிக்குப் பாராட்டுதல் தெரிவித்துவிட்டு, கட்டாயக் கல்வி முறை புகுத்தப்பட்டு ஏழை மாணவருக்கு பகல் உணவு வழங்கப்படல் வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

தோழர் சேனாபதி கவுண்டர் பேசுகையில், "புதிதாக விதிக்கப்பட்டுள்ள வரிகள் ஏழை எளியவர்களை வெகுவாகப் பாதிக்கும்," என்று குறிப்பிட்டுக் காட்டினார்.

"தனது மாவட்டத்தில் இரு மந்திரிகளின் முன்னிலையில், க்ஷேம நலத் திட்டங்களின் கீழ் திறக்கப்பட்ட மருத்துவ விடுதி ஒன்றில் மந்திரிகள் சென்ற மறுகணத்திலிருந்து மருந்தேதும் இருக்கவில்லை," என்று கூறி, 'இத்திட்டங்கள் சரிவர நிறைவேற்றப்படுவதில்லை,' என்று குற்றஞ் சாட்டினார்.

தோழர் ஜீவானந்தம் (கம்) பேசுகையில், "வரி விதிப்புகள் ஏழை விவசாயிகளைப் பெரிதும் பாதிப்பதாகும்," என்று கூறினார்.

பட்டதாரிகளின் பொது அறிவு படுமோசமாம்!

சர்வீஸ் கமிஷன் தரும் சர்டிபிகேட்!

சென்னை சர்க்கார் உத்தியோகங்களுக்குத் தேர்ந்தெடுப்பதற்காக பப்ளிக் சர்வீஸ் கமிஷன் நடத்திய பரீட்சைகளில் தரப்பட்ட ருசி மிக்க விடைகள், இந்த நாட்டில் இளைஞர்களுக்குத் தரப்பட்ட கல்வின தரம் குறைந்திருப்பதையும் நிகழ்கால பிரச்சினைகளும், சம்பவங்களும் என்ன என்ற அறிவுகூட அவர்களுக்கு இல்லை என்பதும் தெரியவருகிறது.

"பி. ஏ.-க்குச் சமமான சர்வீஸ் பரீட்சை எழுதியவர்களுக்குப் பொது அறிவும், ஆங்கில ஞானமும் வெகு குறைவாக இருப்பதாகத் தெரிந்தது," என்று சர்வீஸ் கமிஷன் வெளியிட்டுள்ள அறிக்கை கூறுகின்றது.

சில பிரசித்தி பெற்ற ஆங்கிலக் கவிதைகளை எழுதிய கவிஞர்கள் யாரென்பதுகூட அவர்களுக்குத் தெரியவில்லை; பல பட்டதாரிகளின் பொது அறிவும் படுமோசமாயிருந்தது.

அந்த 'அதியாயபுத்திசாலி' களான பட்டதாரிகள், நயாகரா நீர்வீழ்ச்சி தென்னாப்பிரிக்காவில் இருப்பதாகவும், ஏடன் சூயஸ்கால்வாயில் உள்ள ஒரு துறைமுகம் என்றும், கேள்விகளுக்கு விடை அளித்தனராம்!

பட்டதாரிகளே இப்படி 'புலி' களாயிருந்திருக்கும்போது பத்தாவது வகுப்புப் படித்தவர்கள் எப்படி இருந்திருப்பார்கள் என்பதைச் சொல்லவும் வேண்டுமா?

அவர்களுக்கு நடத்தப்பட்ட சர்வீஸ் பரீட்சையில் ஆங்கிலக் கட்டுரைகளின் 'தரம்' மிகக் கேவலமாக, சென்ற ஆண்டைவிட படுமோசமாக இருந்தது. இலக்கணத்தில் ஒருமை, பன்மை, நிகழ்காலம் இறந்த காலம், ஆண்பால்—பெண்பால், உயர்திணை—அஃறிணை முதலியவை சம்பந்தப்பட்ட அடிப்படை விதிகள்கூட அவர்களுக்குத் தெரியவில்லை.

பொது அறிவு சம்மந்தப்பட்ட மட்டில் சாதாரண பாமர மக்களுக்குத் தெரிந்த அளவுகூட பரீட்சை எழுதிய பல மாணவர்களுக்குத் தெரியவில்லை என்று கமிஷன் கருத்தறிவித்துள்ளது.

"நயாகரா நீர்வீழ்ச்சி காவிரி ஆற்றங்கரையில் இருக்கிறது."
"ஆக்ஸ்போர்டு சென்னையிலோ அமெரிக்காவிலோ உள்ளது."
"கோலார் தங்க வயல் ஆப்பிரிக்காவில் உள்ளது."
"சர். வின்ஸ்டன் சர்ச்சில்—அமெரிக்க ஜனாதிபதி."

இவை பரீட்சை எழுதியவர்கள் தந்த விடைகள்.

இன்னும் சில இதோ:—
"பண்டித நேரு ஒரு பிரபல லேவாதேவிக்காரர்."
"நேருதான் எவரெஸ்ட் சிகரத்தை முதல முதலில் எட்டிப் பிடித்த வீரர்"
"ஜியார்ஜ் ஸ்டீவன்சனும் எவரெஸ்டை எட்டியவரே."
"உப்புதான் உலகத்தில் இனிமையான பொருள். அது பல வாயுக்களின் கலவை."
"வைட்டமின்கள் இங்கிலாந்து, பிரான்ஸ், அமெரிக்கா, ரஷ்யா ஆகிய நாடுகளில் உள்ளன."
"இமயமலையின் உயரம் 93 - கோடி மைல்."
"சர். சி. வி. இராமன் இந்தியாவின் சேனாதிபதி."
"பட்டேல், இந்தியாவில் உள்ள அமெரிக்க தூதுவர்."
"அ இ கா. க. என்பது அகில இந்திய மாணவர்-பயிற்சிப் படை."
எம். பி. பி. எஸ். (டாக்டர் பட்டம்) என்பது "மினரல் பிராட்காஸ்டிங் பம்பாய் சர்வீஸ்"
"வல்லபாய் பட்டேல் ஓர் உலக கவிஞர். அவர் அமெரிக்காவில் ஓர் மெம்பர்"

(4-ம் பக்கம் பார்க்க)

கெஜட் பதிவில்லா ஊழியர்களுக்கு குடியிருப்பு வசதிக்காக.....!

இந்தியப் பேரரசின் உதவி கோரப்பட்டிருக்கிறதாம்!

சென்னை, பிப். 28—

"கெஜட் பதிவில்லாத ஊழியர்களின் குடியிருப்பு வசதிக்காக வீடுகள் கட்டுவதற்கு மத்திய அரசாங்கத்தின் உதவியைக் கோரியிருக்கிறோம். மத்திய அரசாங்கத்திலிருந்து உதவி கிடைத்தால் வீடுகள் கட்டுவது பற்றி பரிசீலிப்போம்,"

—என்று, இராமநாதபுரம் ராஜா, சட்டசபையில் கேள்வி நேரத்தின் போது தெரிவித்திருக்கிறார்.

மேலும் அவர் கூறியதாவது:— சர்க்கார் ஊழியர்களுக்கு 1954—55ல், ரூ. 33,95,600 செலவில் 842 வீடுகள் கட்டப்படுவதாகவும், 1953-54ல், கெஜட் பதிவான அதிகாரிகளுக்கு 13 வீடுகளும், 1954—55ல், ரூ.1,08,400 செலவில் 5 வீடுகளும் கட்டித் தருவதற்கான திட்டம் இருப்பதாகவும் மந்திரி கூறியிருக்கிறார்.

★

கயிறு திரிக்கிறார்கள்!

"கைராட்டையில் நூற்று, நூலால் திரிக்கப்படும் கயிற்றுக்கு விற்பனை வரியிலிருந்து விதிவிலக்களிக்கவேண்டுமென்று தஞ்சை மாவட்ட நூல் கயிறு திரிப்பவர்கள் சங்கத்திலிருந்து கோரிக்கை வந்ததா?" என்று ஒரு உறுப்பினர் கேட்டபோது, 'இல்லை' என்றார் மந்திரி.

அதே உறுப்பினர் தொடர்ந்து, சங்கத்தார் சர்க்காருக்கு அனுப்பிய மனுவின் நகல் வைத்துக்கொண்டே தாம் கேள்வி கேட்பதாகக் கூறினார்.

உடனே ரெவினியூ மந்திரி, உறுப்பினர் கயிறு திரிப்பதாகவும், பொதுப்படையாக ஒருமுனையில் விற்பனை வரி விதிப்பது பற்றி சங்கத்திடம் இருந்து கோரிக்கை வந்ததாகக் கூறினார்.

உடனே அந்த உறுப்பினர் 'மந்திரி தான் கயிறு திரிக்கிறார்; முதலில் கோரிக்கையே வரவில்லை என்று கூறினவர், இப்போது, ஏதோ ஒன்று வந்திருப்பதாகக் கூறுகிறார்,' என்று குறிப்பிட்டார்.

மந்திரி மீண்டும் எழுந்து, உறுப்பினர்தான் கயிறு திரிக்கிறார்; பொதுப்படையில் ஒரு முனையில் விற்பனை வரி விதிப்பது பற்றி கோரிக்கை வந்தது; அதில் கயிறு பற்றி ஒன்றும் இல்லை,' என்றார்.

வேறொரு உறுப்பினர் 'இது கயிறு திரிக்கும் விஷயமாகையாலும், கும்பகோணத்திலிருந்து வருவதாலும் இதை மிகக் கவனமாக அரசாங்கம் பரிசீலித்து முடிவெடுக்குமா?' என்று கேட்டபோது, சிரிப்பொலி சபையை அதிரச் செய்ததாம்.

தம்பதிகளைப் பிரிக்கமாட்டார்களாம்!

"அவசரமான காரியங்களுக்காகச் செல்லுகையில் மட்டும், தம்பதிகள், சைக்கிள் ரிக்ஷாக்களில் இருவராகச் சேர்ந்து செல்லலாம்," என்று கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் மந்திரி பரமேஸ்வரன் குறிப்பிட்டார்.

"தம்பதிகள் சேர்ந்து சைக்கிள் ரிக்ஷாவில் போவதை சர்க்கார் அனுமதிக்குமா?" என்று சிரிப்புக்கிடையே ஒரு உறுப்பினர் கேட்டபோது, "தம்பதிகளைப் பிரிக்கும் நோக்கம் சர்க்காருக்கு இல்லை," என்று மந்திரி பதிலளித்தார்.

இதில் மட்டும்தானா அனுபவமில்லை?

சைக்கிள்களில் மின்சார 'ஹார்ன்' பொருத்துவது பற்றி சபையில் பேசப்பட்டபோது, மந்திரி சுப்பிரமணியம், 'தான் சைக்கிளே விட்டதில்லை,' என்ற தமது அனுபவமின்மையை, 'மந்திரிக்கு சைக்கிளைப் பற்றி ஒன்றுமே தெரியாதா,' என்று எதிர்க்கட்சியினர் கேட்டபோது ஒப்புக்கொண்டிருக்கிறார்.

தடை இருப்பது தெரியாமல் கிராம மக்கள் மின்சார 'ஹார்ன்' வாங்கிவருவதாயும், எனவே, மின்சார ஹார்ன் விற்பது தடுக்கப்பட வேண்டும் என்றும் ஒரு உறுப்பினர் கோரினார்.

திருக்குளத் திருப்பணி

சென்னையில் உள்ள பார்த்தசாரதி, கபாலி கோவில் குளங்களை சுத்தப்படுத்துகிற திருப்பணியை நகரசபை கமிஷனர் கவனிப்பதாகவும், இதர குளங்களை சுத்தப்படுத்துகிற பணியினை அறநிலைய பாதுகாப்பிலாகா உதவி கமிஷனர் கவனிப்பார் என்றும் மந்திரி தெரிவித்திருக்கிறார்.

என்று அவியும் அடிமை மோகம்?

'சேலத்தில் உருக்கு ஆலை நிறுவப்படும் விஷயம் எதிர்காலத்தை வெகு தூரம் பாதிப்பதாகும்,' என்று இந்திய சர்க்கார் உற்பத்தி மந்திரி கே. சி. ரெட்டி கூறியிருப்பது சென்னை சர்க்கார் கவனத்திற்கு வந்திருக்கிறதா?' என்று கேட்கப்பட்டபோது, 'மத்திய சர்க்கார் மந்திரி அப்படி கூறியது தவறல்ல,' என்று தொழில் மந்திரி பக்தவத்சலம் கூறினார்.

இனிப்பான செய்தி

சென்ற ஆண்டில் நான்கு சர்க்கரை ஆலைகள் துவங்க அனுமதி வழங்கப்பட்டது என்றும், அதில் மூன்று ஆலைகள் நிறுவுவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருப்பதாயும், ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில் விவசாய மந்திரி கூறியிருக்கிறார்.

அங்கிகரித்துவிட்டார்கள்

சென்னை நிதி மந்திரி தாக்கல் செய்துள்ள வரவு-செலவுத் திட்டத்தில் அறிவித்துள்ள வரி பிரரேபணைகளை சென்னை சட்டசபை காங்கிரஸ் கட்சி ஏகமனதாக அங்கீகரித்துள்ளதாம்!

மத்திய சர்க்கார் பிரச்சினையாம்!

"திரு—கொச்சியிலுள்ள தமிழ்ப் பகுதிகள் தாய்த் தமிழகத்துடன் இணைக்கப்படுவது மாகில சர்க்காருக்குச் சம்மந்தப்பட்ட விஷயமல்ல; அது ஜனாதிபதியின் அதிகாரத்தில் இருக்கும் ஒன்றாகும்; அதற்காக மாகில புனரமைப்புக் குழுவிடம் பிரதேசக் காங்கிரஸ் தந்திருக்கும் யதாஸ்து அதன் அபிப்பிராயம் மட்டுமே தவிர, சிபாரிசு அல்ல; இவ்விஷயத்தில் என்னதான் நடைபெறுகிறதென்பதை நாம் பொறுத்திருந்து பார்ப்போம்."

இவ்வாறு திரு—கொச்சி மாகில முதலமைச்சர் பனம்பள்ளி கோவிந்த மேனன், நிருபர்கள் கூட்டமொன்றில் பேசியிருக்கிறார்.

மேலும் அவர், தி. த. நா. காங்கிரஸ் எம். எல் ஏ-க்கள் பற்றிக் குறிப்பிட்டுப் பேசுகையில், அந்த 12 எம். எல். ஏ-க்களும் இப்போது காங்கிரஸ் எம். எல். ஏ.-க்களே யாகும் என்றும், அவர்கள் எந்தவித நிபந்தனையும் இல்லாமல் காங்கிரசில் சேர்ந்துவிட்டார்களென்றும், அவர்கள் காங்கிரஸ் கட்சியினராகி விட்டதால் அவர்கள் மீதுள்ள வழக்குகளை திரும்பிப் பெற்றுக்கொள்ள வேண்டிய அவசியமில்லை என்றும், அவர்களது ஜாமீன் மனுக்களை எதிர்க்க வேண்டாமென்று அட்வகேட் — ஜெனரல் கூறியதால்தான் சர்க்கார் தரப்பில் அவர்களை எதிர்க்கவில்லையென்றும் கூறினார்.

மேலும் அவர், ஒரு கட்சியிலிருந்து பிறிதொரு கட்சிக்கு மாறிவிடுவதால், விட்டுவந்த கட்சியைக் கலைத்துவிட வேண்டுமென்பதில்லையென்றும், எப்படியாயினும் தற்போது திரு—தமிழ்ப் பிரதேசங்களில் அமைதியே குடிகொண்டுள்ளதென தாம் நம்புவதாகவும் அவர் கூறியிருக்கிறார்.

உலகத்தில் உள்ள கழுதைகள்!

சீனா, ரஷ்யா ஆகிய நாடுகளில் உள்ள கழுதைகளைத் தவிர உலகத்தில் உள்ள மற்ற எல்லா நாடுகளிலுமாகச் சேர்த்து மொத்தம் 3,34,00,000 கழுதைகள் இருக்கின்றனவாம்.

ஐந்தாண்டுத் திட்டத்தின் முதல் மூன்று ஆண்டுகளில், சுமார் 2,500 இரயில் பெட்டிகள், இந்திய இரயில்வேக்களில் புதிதாக உபயோகத்துக்குக் கொண்டு வரப்பட்டன.

பெப்சுவில் வெளியேற்றப்பட்ட உழவர்கள் வாழ்வு பெற......!

குடும்பம் ஒன்றுக்கு ரூ. 1,000 இந்தியப் பேரரசின் நன்கொடை

அம்பாலா, பிப். 28—

பெப்சு மாகிலத்தில், உள்கிலத்திலிருந்து வெளியேற்றப்பட்ட குடியானவர்களுக்கும், 5 ஏக்கருக்கும் குறைவாக நிலமுடைய ஏழை விவசாயிகளுக்கும் வாழ்வளிப்பதற்காக பெப்சு சர்க்கார் ஒரு திட்டமொன்று தீட்டியுள்ளார்களாம்.

இதனால் மொத்தம் 20,000 பேர்களுக்கு வாழ்வு தரப்படுமாம். இதற்கு 2 கோடி ரூபாய் செலவாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது.

இத்திட்டப்படி, பெப்சு மாநில சர்க்கார் அமைக்கும் காலனியில் குடியேறி வாழும் ஒவ்வொரு குடும்பத்திற்கும் மத்திய அரசாங்கம் ரூ. 1,000 மானியம் தர சம்மதமளித்திருப்பதாகக் கூறப்படுகிறது.

சினிமா பற்றிய பிரச்சினைகள் குறித்து பண்டித நேருவின் கருத்து

"தனி மனிதன் சுதந்திரத்தில் தலையிடவோ, அதைக் கட்டுப்படுத்தவோ கூடாதுதான்; ஆனால், சில நேரங்களில் அரசாங்கம் ஓரளவு தலையிடத்தான் வேண்டியுள்ளது; ஆனால், எந்த அளவுக்குத் தலையிடலாம் என்பது பரிசீலனைக்குரியதாகும்."

"மக்களின் ஒழுக்கத்தை எடைபோடும் நீதிபதியாக, சர்க்கார் செயலாற்றினால் ஆபத்துதான்; குறிப்பாக நடனம், சங்கீதம், இலக்கியம் போன்ற கலைகளில் அரசாங்கம் அளவு மீறித் தலையிட்டு, அவை இந்த மாதிரித்தான் இயங்க வேண்டுமென நிர்ணயிப்பதை நான் ஆதரிக்கவில்லை"

"அரசாங்கத்தின் தலையீடு, தலையிடாமை இவை இரண்டிற்குமிடையில் தனி மனித சுதந்திரம் பரிணமிப்பதற்கு எவ்வளவோ இடம் உள்ளது. தலையீட்டுக்கு எங்கே அவசியம் என்ற சர்ச்சை அவசியமானால், அவ்வாறே தாராளமாக சர்ச்சை செய்து ஒரு முடிவுக்கு வரலாம்."

"சினிமாத் துறையில் போட்டியிட அரசாங்கமும் விரும்பக்கூடும்—வெறும் போட்டிக்காக அல்ல: உயர்ந்த சுவைகளை நிர்ணயிப்பதற்காகத்தான்."

இவை பண்டித நேரு அவர்கள், 'சினிமா விவாத அரங்கு' ஒன்றை புதுடில்லியில் 27—2—55 அன்று துவக்கிவைத்துப் பேசுகையில் குறிப்பிட்ட கருத்துக்களாகும்.

தொடர்ந்து அவர் கூறியதாவது:—

"தமாஷா வரியை நீக்க வேண்டும் என்பதற்காக ஆதாரமாகக் காட்டப்படும் வாதங்களை என்னால் ஏற்றுக்கொள்ள இயலவில்லை. தமாஷாவுக்கு ஏன் வரி விதிக்கக் கூடாது என்பது எனக்குப் புரியாததாயுள்ளது; ஆனால் எவ்வளவு வரி விதிப்பது என்பது வேறு விஷயம்."

"தணிக்கை சம்பந்தப்பட்ட மட்டில், அதிகமான வரையறை விதிப்பதை நான் ஆதரிக்கவில்லை; ஆனால்; பொதுஜன முக்கியத்துவம் வாய்ந்த விஷயங்களில் வரம்பற்ற சுதந்திரம் வேண்டுமென்பது அபத்தமாகும்."

கைத்தறி, குடிசைத் தொழில் அபிவிருத்தி!

மேலும் நிதி உதவி

கைத்தறி, குடிசைத் தொழில்கள், சிறு கைத்தொழில்கள் ஆகியவற்றின் அபிவிருத்திக்காக இந்திய சர்க்கார், மேற்கொண்டு சகாயத் தொகைகளும் கடன்களும் அனுமதித்திருக்கிறார்கள்.

கைத்தறி வளர்ச்சிக்காக உத்தரப் பிரதேசத்துக்கு ரூ 2,09,132-மானியமாக, அளிக்கப்பட்டிருக்கிறது.

மைசூருக்கு 2 லட்ச ரூபாய் கடனாகவும், ரூ. 45,000 மானியமாகவும் அளிக்கப்பட்டிருக்கிறது.

மத்திய பாரதத்துக்கு, ரூ. 1,24,000 மானியமாக வழங்கப்பட்டிருக்கிறது. பல்வேறு சிறு கைத்தொழில்களின் வளர்ச்சிக்காக, மொத்தம் ரூ. 1,13,790-மானியமாக அளிக்கப்பட்டதுடன், கடனாக மொத்தம் 60,000-ரூபாயும் அளிக்கப்பட்டிருக்கிறது.

கருமாரத் தொழில், தகடுத் தொழில், பற்றவைப்புத் தொழில் ஆகியவற்றை கடத்துவதற்கான பட்டறை ஒன்றிற்கு அலுவல் மூலதனம் வழங்குவதற்காக, ஒரிசாவுக்கு ரூ 1,500 மானியமாக அளிக்கப்பட்டிருக்கிறது.

பனை வெல்ல உற்பத்தித் தொழில் அபிவிருத்திக்காக, அகில இந்திய காதி கிராமத் தொழில்கள் போர்டுக்கு ஒரு லட்ச ரூபாய் கடனாக அளிக்கப்பட்டிருக்கிறது. அத்துடன், அந்த போர்டுக்கு, ரூ. 50,000 மானியமாகவும் வழங்கப்பட்டிருக்கிறது.

ஐந்தாண்டு திட்ட இலட்சிய அளவை, 1953-ம் ஆண்டிலேயே மிஞ்சிவிட்ட துணி ஆலைகளின் உற்பத்தி, 1954-ம் ஆண்டில், சுமார் ஏழு கோடி கெஜம் கூடுதலாகியிருக்கிறது.

கடற் சுங்க-தரைச் சுங்க வசூல்களின் மூலம் 1954 டிசம்பர் திங்களில் கிடைத்த வருமானம் மொத்தம் 1,633 லட்ச ரூபாயாகும்; 1953 டிசம்பர் திங்களில் இவ்வகையில் ரூ. 14 லட்சம் கிடைத்தது!

நமது பார்வையில் --- காமன்வெல்த் பிரதமர்கள்

அண்மையில் லண்டனில் நடைபெற்ற காமன்வெல்த் பிரதமர்கள் மாநாட்டின்போது எடுக்கப்பட்ட படம்—உட்கார்ந்திருப்பவர்கள் (இடமிருந்து வலம்): எ. ஜி. ஹாலண்ட் (நியூசிலாந்து); செயின்ட் லாரண்ட் (கனடா); சர் வின்ஸ்டன் சர்ச்சில் (இங்கிலாந்து); ஆர். ஜி. மென்ஜீஸ் (ஆஸ்திரேலியா); பண்டித நேரு (இந்தியா). பின்வரிசையில் நிற்பவர்கள் (இடமிருந்து வலம்): ஸி. ஆர். ஸ்வார்ட் (தென்னாப்பிரிக்கா பிரதமருக்காக வந்திருந்த தெ. ஆ. நீதி இலாகா மந்திரி); முகமது அலி (பாகிஸ்தான்); சர் ஜான் கொத்தலாவலை (இலங்கை); காட்பிரே ஹாக்கின்ஸ் (ரொடீஷியா, நியாசலாந்து பெடரேஷன்).

பொது இடங்கள் காங்கிரசுக்கே ஏகபோக உரிமையா?

வீட்டுக்கு வீடு கூடம் தேவைபோல பேட்டைக்குப் பேட்டை கூட்டம்கூட இடம் தேவை!

சென்னையில் தோழர் நெடுஞ்செழியன் கண்டனமும் விளக்கமும்

"வீட்டுக்கு வீடு கூடம் ஒன்று எவ்வளவு முக்கியமோ அவ்வளவு முக்கியம், பேட்டைக்குப் பேட்டை கூட்டம் கூடுவதற்கான ஒரு மைதானம்;

"பார்க்க வருபவர்களைச் சந்தித்து உரையாட கூடம் தேவைப்படுவதைப்போலவே, மக்களைச் சந்தித்து பல கட்சியினரும்—அவர்கள் காங்கிரசாரானாலும், கம்யூனிஸ்டுகளானாலும், திராவிடர் கழகமானாலும், தி. மு. கழகமானாலும்—தங்கள் தங்கள் கருத்துக்களை மக்களுக்குப் பரிமாறுவதற்கு, பொதுக்கூட்டம் கூட்டுவது தானே வழி; அதற்கு பேட்டைக்குப் பேட்டை மைதானம் தேவை இல்லையா?

"ஜனநாயக ஆட்சி நடப்பதாகக் கூறுகிறார்கள்; 'ஜனம்' என்றால் 'மக்கள்'; 'நாயகம்' என்றால் 'தலைமை' என்று பொருள்; மக்கள் தலைமை பூண்டு ஆட்சி நடத்தும் ஒரு நாட்டில் மக்களைச் சந்திக்க தகுதியான ஒரு இடம் வேண்டாமா?

"பொதுக் கூட்டமல்லாது வேறு எந்த வகையில் இந்த நாட்டில் உள்ள பெரும்பான்மை மக்களைச் சந்திக்க முடியும்?

"பத்திரிகை படித்துத் தெரிந்து கொள்ளக்கூடிய நிலையிலா இந்த நாட்டு மக்கள் இருக்கிறார்கள்? இங்குதான் நூற்றுக்கு 80 பேர் 'தற்குறி'களாயிற்றே? இந்த நிலையில் உள்ள மக்கள், நாட்டு நிலைகளையும், இன்னபிறவற்றையும் அறிந்து கொள்ளவும், அறிந்தவற்றை தங்கள் தங்கள் சிந்தனைக்கேற்றித் தெளிவு பெறவுமாக உள்ள வழி, பொதுக் கூட்டங்கள்தானே! அப்படிப் பொதுக் கூட்டங்கள் நடத்துவதற்கு—மக்களைச் சந்திப்பதற்கு—கருத்துக்களைப் பரிமாறுவதற்குத் தகுதியான இடம் தேவை இல்லையா? பொதுக் கூட்டங்களல்லாது மக்கள் வேறு எங்கே கருத்துக்களை வாங்குவது?

"ஒரு நாட்டில்—அதுவும் ஜனநாயக நாட்டில்—பூங்காவும் சாலையும், பாலமும், பள்ளியும், மருத்துவமனையும் எவ்வளவு தேவையெனக் கொள்ளப்படுகின்றனவோ அப்படித்தான் பொதுக் கூட்டங்கள் நடத்துவதற்கு நல்ல பல மைதானங்களும், மண்டபங்களும் நிச்சயமாகத் தேவை.

"மதுரையில்—ஒரு சந்தைத் திடல்; திருச்சியில்—டவுன் ஹால்; தஞ்சையில்—திலகர் திடல்—இப்படி, இரண்டாந்தர, மூன்றாந்தர நகரங்களில் கூட, அந்த நகரங்களிலிருக்கும் நகர சபையினர், பொது இடங்களை எல்லாக் கட்சியினரும் கூட்டம் கூட்ட வசதியாக ஏற்பாடு செய்துள்ளனர்; அவர்களிடம் இருக்கிற ஜனநாயகப் பண்புகூட தலைநகரில் உள்ள ஆட்சியாளர்களுக்கில்லையே!

"ஐலண்ட் மைதானம் காங்கிரஸ் கட்சிக்கு மட்டும்தான்! ஜிம்கானா மைதானமும் அப்படியே! நகரசபை ஸ்டேடியமும் அவர்களுக்கே! ராஜாஜி மண்டபம் அவர்களுக்கு மட்டுமே! இப்படித்தானே இங்கு உள்ளது? இது ஜனநாயகப் பண்பாகுமா?

"நகரசபையினர் பொறுப்பில் உள்ள விளையாட்டு மைதானங்கள், பள்ளித் திடல்கள் இவைகள்கூட இதர கட்சியினருக்குத் தரப்படுவதில்லையே! வேறு பல ஊர்களில் உள்ள நகரசபையினருக்கிருக்கும் ஜனநாயகப் பண்பில் சிறிதளவேனும் இங்குள்ளோருக்கு இருக்கக்கூடாதா?

"மக்களை பொதுக்கூட்டத்தில் சந்திக்க வேண்டிய அவசியம் எல்லாக் கட்சியினருக்கும் இருக்கிறது; எனவே, சென்னையில் பல பேட்டைகளிலும், கூட்டம் கூடுவதற்கான பொது இடங்களை நகர சபையோ, அரசாங்கமோ செய்து தருவதற்காக எல்லாக் கட்சியினரும் ஒன்றுபட்டு, நகரசபை, அரசாங்கம் ஆகியவற்றிற்குத் தூது சென்று முறையிட்டு முயற்சிக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்,"

—என்று, தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் சென்னை மீர்சாகிப்பேட்டை 43-வது வட்ட தி. மு. கழக கிளையின் நான்காம் ஆண்டு விழாக் கூட்டம் 1—3—55 அன்று நடைபெற்றபோது குறிப்பிட்டார்.

மேற்படி கூட்டம் மீர்சாகிப் பேட்டை, வெங்கடாசல முதலி தெரு, பிள்ளையார் கோவிலுக்குப் பின்புறமுள்ள திடலில் மாலை 7 மணி அளவில் நடைபெற்றது.

கிளைக் கழகச் செயலாளர் தோழர் மு. புரட்சிமணி கிளைக் கழகத்தின் மூன்றாண்டு காலப் பணியை விவரித்து சிறு சொற்பொழிவு நிகழ்த்திவிட்டு, தோழர் கோ. இளவரசு அவர்களை தலைமை தாங்கக் கோரினார்.

தனது தலைமையுரையில்தோழர் கோ. இளவரசு, கழகக் கொள்கை, இலட்சியம் குறித்து விளக்கினார்.

அடுத்து தோழர் ஏ. கே. வில்வம் சிறிது நேரம் பேசினார்.

பின்னர் தோழர் கே. எம். கண்ணபிரான், ஐந்தாண்டுத் திட்டத்தில் இந்தியப் பேரரசு தென்னாட்டைப் புறக்கணித்துள்ளதைக் கண்டிக்கும் தீர்மானத்தைக் கொண்டுவந்து பேசினார்.

கூடியிருந்த ஆயிரக் கணக்கான மக்கள் ஆரவாரப் பேரொலி எழுப்பி, தீர்மானத்தை முழுமனதுடன் ஆதரித்து தங்கள் கண்டனத்தைத் தெரிவித்துக் கொண்டனர்.

இறுதியாக தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் நீண்டதோர் கருத்துரை நிகழ்த்தினார். செயலாளர் நன்றி கூறலுடன் கூட்டம் 9 மணி அளவில் இனிது முடிவுற்றது.

கூட்டத்தில் உண்டியல் மூலம் ரூ. 13—5—9 வசூலானதாக செயலாளரால் அறிவிக்கப்பட்டது.

★

தொடர்ந்து பேசுகையில் தோழர் நெடுஞ்செழியன் குறிப்பிட்டதாவது:—

"நான் இங்கே ஒரு உயரமான பரண்மீது நின்றுகொண்டு பேசுகிறேன்; நீங்கள் எல்லாரும் என்னை அண்ணாந்து பார்த்து, கழுத்தை உயர்த்திக் கேட்டுக்கொண்டிருக்கிறீர்கள்: கூட்டம் நடத்துவதற்கு இந்தப் பேட்டையில் இத்தனை நெருக்கடி இருக்கிறது

"பண்டைத் தமிழகத்திலே பரணி பாடுதல் உண்டு. மன்னன், எதிரியை போர்க்களத்தில் முறியடித்து, வெற்றிவாகை சூடி, போர்க்களத்திலிருந்து தாயகம் திரும்புகையில் அந்த நாட்டில் உள்ள தமிழ்ப் பெரும் புலவர்கள், பரண்மீது ஏறி நின்றுகொண்டு வெற்றி வாகை சூடிவரும் மன்னனையும், அவன் நாட்டையும் புகழ்ந்து பாடுவார்களாம். அதைத் தான் பரணி பாடுதல் என்பர்.

"அதைப்போல, தி. மு கழகம் போராட்டங்கள் பல நடத்தி வெற்றி பெற்றிருப்பதைக் காட்டத்தானோ என்னவோ, என்னைப் பரண்மீது நிறுத்தி பேசச் செய்திருக்கிறார்கள்."

தொடர்ந்து பேசுகையில் தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், தி. மு கழகத்தின் அரசியல் இலட்சியமான 'திராவிட நாடு திராவிடருக்கே' என்பதை விளக்கிப் பேசுகையில், திராவிட நாட்டைக் காட்டிலும் உலகத்தில் சின்னஞ் சிறு நாடுகள் 33 உள்ளன என்றும், அவை எல்லாம் ஒன்றுபட்டிராமல் தனித் தனியாக இயங்குவதற்காகக் காட்டப்படுகிற காரணங்களைக் காட்டிலும், திராவிடம் வடநாட்டின் ஆதிக்கப் பிடியிலிருந்து தனித்து வாழ வேண்டும் என்பதற்காக நாம் காட்டுகிற காரணங்கள் எந்தவகையிலும் குறைந்தவை அல்ல என்பதையும், திராவிடம் வடநாட்டுடன் சேர்ந்திருப்பதால், வடநாடு தென்னாட்டினை எவ்வளவு சுரண்டமுடிகிறது என்பதற்கான புள்ளி விவரங்களை எடுத்துக் காட்டியும், இந்த நாட்டு மக்கள்—திராவிடர்கள் வளமுற்று வாழ, திராவிடம் வடநாட்டின் ஆதிக்கப் பிடியினின்றும் விடுபடுவதைத் தவிர வேறு வழியில்லை என்பதைச் சுட்டிக் காட்டியும் பேசினார்.

பட்டதாரிகளின் ......

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

'இயேசு கிறிஸ்து காசி சர்வகலா சாலையில் கல்வி கற்பதற்காக வந்தவர்."

இரத்த சேமிப்பு நிலையம் (பிளட் பாங்க்) என்றால் என்ன என்பதற்கு ஒரு மாணவர் அசோகரின் சரித்திரத்தைப் புரட்டி எடுத்திருக்கிறார்:—

"கலிங்க நாட்டின் மீது, அசோக சக்ரவர்த்தி படையெடுத்துச் சண்டையிட்டபோது, அந்தக் கோர யுத்தத்தில் வழிந்தோடிய இரத்த நதியின் கரைதான் 'இரத்தப் பாங்கு' எனப் பெயர் பெற்றிருக்கிறது."

வாழ்க்கை என்றால் என்ன என்பதற்கு ஒருவர் கீழ்க்கண்ட விளக்கம் தருகிறார்:—

"மனைவி இல்லாவிட்டால் வாழ்வே இல்லை: ஆனால், அதே மனைவி வாழ்க்கையின் கத்தியாக இருக்கிறாள்."

"அம்மை தடுப்பு ஊசி போடுதல் ஒரு கூட்டுறவு இயக்கமாகும்," என்று மற்றொரு நபர் எழுதியிருக்கிறார்.

சென்னை மாவட்ட தி. மு. கழக நிதிக்காக

சிறப்புச் சொற்பொழிவு

(தி. மு. கழக தலைமை நிலைய அனுமதி பெற்றது)

★

ஊருக்கெல்லாம் உழைத்தான்—
உயிருடன் எரிக்கப்பட்டான்! **புருனோ**

அந்தப் பெருந் தியாகியின் வரலாற்றினை

இரா. நெடுஞ்செழியன்

தெள்ளுதமிழில் எடுத்தியம்புகிறார்

4-3-55 வெள்ளி மாலை 6-30 மணிக்கு
சென்னை கோகலே மண்டபத்தில்

நன்கொடை: அணா 8; அணா 4

—சென்னை மாவட்ட தி. மு. கழகம்

கழகக் கூட்டம்

குடியேற்றம்

4—3—55 மாலை 6 மணிக்கு குடியேற்றம் ஆற்றில்

தலைவர்: சே. மா. அரங்கசாமி

பேசுபவர்:

தோழியர் சத்தியவாணிமுத்து

பொன்மலை திராவிட வாலிபர் கழக உறுப்பினர் கூட்டம்

"4—3—55 மாலை 6-30 மணிக்கு பொன்மலை தி. மு. கழக அலுவலகத்தில் மேற்படி கழக உறுப்பினர்கள் கூட்டம் நடைபெறும்; அது சமயம் பல முக்கிய விஷயங்கள் பற்றி யோசித்து முடிவு காண வேண்டியிருப்பதால், உறுப்பினர்கள் தவறாது வர வேண்டும்" என, கழகத தலைவர் ஜி. பராங்குசம் தெரிவிக்கிறார்.

சி. பி. சிற்றரசு

சுற்றுப்பிரயாணம்

மார்ச் 3: வெள்ளெரிபட்டி (மதுரை)
4: மங்கலலூர்
6: புதுவை
8: வைப்பமலை
9: வரதராசபுரம்
13: விருதம்பட்டு (வேலூர்) காலை — திருமணம்; மாலை பொதுக்கூட்டம்

திருமணங்கள்

குன்றத்தூர், மேட்டுத் தெரு, எண் 8ம் இல்லத்தில் 4-3-55 காலை 9-க்கு தோழர் ஆ. தட்சணாமூர்த்தி தலைமையில், வேலாயுதம—சரோஜினி; பஞ்சாட்சரம்—அன்னம்மாள்; எல்லப்பன்—கற்பகம் ஆகியோர் திருமணங்கள் நடைபெறும். தோழர்கள் டி. வி. நாராயணசாமி, எஸ். எஸ். இராசேந்திரன் வாழ்த்துரை வழங்குவர்.

ஃ ஃ ஃ

4—3—55 காலை 7-30 மணி அளவில் தோழர் பி. கச்சபாலயம் அவர்கள் தோழியர் நாகரத்தினம் அவர்களை வாழ்க்கைத் துணைவியாக ஏற்றுக்கொள்ளும் விழா, பெரிய காஞ்சீபுரம் ஏகாம்பரநாதர் சன்னதி வீதி 58-ஏ தேவார பாடசாலையில் நடைபெறும்.

ஃ ஃ ஃ

4—3—55 காலை 8-30 மணி அளவில் பெரம்பூர் மாதவரம் ஹைரோடு, இலட்சுமி அம்மன் கோயில் தெருவில், காஞ்சி-மணிமொழியார் தலைமையில், தோழர் நா. பூ. சந்திரன் — தோழியர் புஷ்பலதா திருமணம் நடைபெறும். இடம்:—இலட்சுமி அம்மன்கோவில் தெரு, மாதவரம் ஹைரோடு, பெரம்பூர், 33-வது எண் இல்லம்.

ஆந்திர சட்டசபை....

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

இரண்டு தொகுதிகளில் போட்டியிட்டு வென்றுள்ள ம. சோ. கட்சியினரான பி. வி. ஜி. ராஜு, கே. வி. எஸ். பத்மநாப ராஜு என்ற இருவரும் தங்களை எதிர்த்த எல்லாக் கட்சியினரையும் ஜாமீன் இழக்கச் செய்திருக்கின்றனர்.

விஜயநகரம் தொகுதியில் போட்டியிட்ட ம. சோ. கட்சி தலைவர் பி. வி. ஜி ராஜு (விஜயநகரம் ராஜா) அங்கு பதிவான 31,789 வாக்குகளில் 27,404 வாக்குகளைப் பெற்று, தன்னை எதிர்த்த கம்யூனிஸ்டு, காங்கிரஸ் அபேட்சகர்களை தோற்கடித்து, ஜாமீன் இழக்கச் செய்திருக்கிறார் எனத் தெரிகிறது.

காங்கிரஸ் முன்னணி பெற்றுள்ள 38 இடங்களில், காங்கிரஸ் கட்சிக்கு 30, கிருஷிக்லோக் கட்சிக்கு 7, பிரஜா கட்சிக்கு 1 ஆக இடங்கள் கிடைத்திருக்கின்றன.

கோட்டி ரெட்டி, எஸ் பி. பி. பட்டாபிராம ராவ் என்ற இரு பிரகாசம் மந்திரி சபையிலிருந்த மந்திரிகளும் வெற்றி பெற்றவர்களில் குறிப்பிடக்கூடியவர்கள்.

காங்கிரஸ் முன்னணியும் கம்யூனிஸ்டு கட்சியும் நேரிடையாகப் போட்டியிட்ட 14 இடங்களில் 13 இடங்களைக் காங்கிரஸ் கைப்பற்றியிருக்கிறது என்ற தகவலும் தரப்படுகிறது.

800 தொழிலாளர்

உள்ளிருப்பு வேலை நிறுத்தம்

புதுவை, பிப். 28—

புதுவையில் உள்ள ஒரு துணி ஆலையில், அங்கு பணி புரியும் 800 தொழிலாளர்களும் கடந்த 3 நாட்களாக உள்ளிருப்பு வேலை நிறுத்தம் செய்து வருவதாகத் தெரிகிறது.

அந்த ஆலையைச் சுற்றி ஆயுதந் தாங்கிய போலீசார் பாதுகாவல் செய்து வருகின்றனராம்.

ஒரு தொழிலாளியை வேலையை விட்டு நீக்கியதே வேலை நிறுத்தத்திற்கான காரணம்.

மத்திய சர்க்கார் 1954—55-ம் ஆண்டின் முதல் ஒன்பது மாத காலத்தில், சிறு தொழில்களின் அபிவிருத்திக்காக ரூ. 19,06,300 சகாயத் தொகையாகவும், ரூ. 83,71,890 கடனாகவும் வழங்கியுள்ளனர்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம். ஏ.